**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் -2, பொள்ளாச்சி.**

**முன்னிலை திரு.E.பிரகாசம், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-2,பொள்ளாச்சி.**

**2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06-ஆம் நாள் திங்கட்கிழமை**

**சுருக்கு விசாரணை வழக்கு எண். 2043/2014**

**(CNR NO: TNCB 120000522014)**

துரைசாமி (43/2014),
த/பெ. வரதராஜ்,
23/1 எம்.ஜி.ஆர். நகர்,
சூளேஸ்வரன்பட்டி போஸ்ட்,
பொள்ளாச்சி. .......புகார்தாரர்

// எதிர் //

தேன்மொழி (50/2014),
க/பெ. ரத்தினசாமி,
16/5 சக்ரபாணி தெரு,
ஸ்கேன் பாயிண்ட் அருகில்,
வெங்கடேசா காலனி,
பொள்ளாச்சி. .......எதிரி

இவ்வழக்கானது 19.12.2024-ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. அன்வர்பாட்சா B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு. M. செந்தில்குமார் M.A., M.Phil., LLB., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், சாட்சியம், சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பிலும் வாதுரைகள் கேட்கப்பட்டு இந்த வழக்கில் இந்நீதிமன்றம் இன்று வழங்கும்,

**//தீர்ப்புரை//**

இவ்வழக்கானது புகார்தாரரால் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் எதிரி குற்றமிழைத்ததாகவும், தக்க தண்டனை வழங்கிட கோரி கு.வி.மு.ச. பிரிவு 200 உ/இ 142 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. புகாரின் சுருக்கம்**

எதிரி கடந்த 23.12.2013 ம் தேதி புகார்தாரரின் வீட்டிற்கு வந்து அவருடைய அவசர தேவைக்காக ரூ.1,00,000/- கைக்கடனாக பெற்றுக் கொண்டு அதை 31.12.2013 ம் தேதி திருப்பித் தருவதாக உறுதி கூறினார். எதிரி மேற்படி கடனை திருப்பிச் செலுத்தும் பொருட்டு அப்போதே பொள்ளாச்சி கிளை, ஐ.டி.பி.ஐ. வங்கிக் காசோலையை ரூ.1,00,000/- ற்கு 31.12.2013 ம் தேதியிட்டு என் பெயருக்கு பூர்த்தி செய்யப்பட்டதை கொடுத்தார். அந்த காசோலை எண் 017754 ஆகும். எதிரி புகார்தாரரிடம் மேற்படி பணம் கைக்கடனாக பெற்றுக் கொண்டு காசோலை தந்தது அப்போது அவரது வீட்டில் இருந்த மன்மதராஜ் என்பவருக்கு நேரடியாக தெரியும்.

எதிரி கொடுத்த காசோலையை புகார்தாரர் அவரது வங்கிக் கணக்குள்ள பொள்ளாச்சி கிளை, பெடரல் வங்கியில் கடந்த 31.12.2013 ம் தேதி வசூலுக்காக சமர்ப்பித்தபோது மேற்படி காசோலை போதிய பணமில்லை 02.01.2014 ம் தேதி திருப்பப்பட்டது.

மேற்படி காசோலை திருப்பப்பட்ட விபரம் குறித்தும் காசோலை தொகையை 15 நாட்களில் திருப்பிச் செலுத்தக் கோரியும் 28.01.2014 ம் தேதி புகார்தாரர் அவரது வழக்கறிஞர் மூலம் சட்ட அறிவிப்பு ஒன்றை எதிரியின் வீட்டு விலாசத்திற்கு அனுப்பியதாகவும் மேற்படி அறிவிப்பை எதிரி 29.01.2014 ம் தேதி பெற்றுக் கொண்டு இதுநாள் வரை காசோலைக்குரிய தொகையையோ பதில் அறிவிப்போ திருப்பிக் கொடுக்கவில்லை என்றும், மேலும் போதிய பணம் இல்லை என்ற விபரம் நன்கு தெரிந்தும் காசோலையை கொடுத்து புகார்தாரரை ஏமாற்றியதாக தெரிவித்து எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்மென்று இந்த புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 204 ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது**

புகார்தாரர் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் எதிரி குற்றமிழைத்ததாக கு.வி.மு.ச. பிரிவு 200 உ/இ 142 மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ் புகார் தாக்கல் செய்துள்ளார். புகார்தாரரின் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டு, வாதுரை கேட்கப்பட்டு, வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு, கு.வி.மு.ச. பிரிவு 204 ன் கீழ் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பிட போதிய முகாந்திரம் இருந்ததால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

**3. எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் நகல் வழங்கப்பட்டது**

எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அவருக்கு வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, குற்றம் பற்றி கு.வி.மு.ச. பிரிவு 251 ன் கீழ் வினவ எதிரி குற்றத்தை மறுத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**4. புகார்தாரர்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சி சான்றாவணங்கள் விபரம்**

புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு அவர் மூலம் பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் புகார்தாரர் தரப்பில் மன்மதராஜ் என்பவர் பு.சா.ஆ.2 ஆக விசாரணை செய்யப்பட்டு அத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5. எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) ன் கீழ் கேள்வி வினவி கேட்கப்பட்டது**

இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரியை பாதிக்கின்ற அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)- ன் கீழ் வினவ எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரணை செய்திட சாட்சி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

**6. எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றவாணங்கள் விபரம்**

எதிரி தரப்பில் **IDBI வங்கி பொள்ளாச்சி கிளையின் வாடிக்கையானர் சேவை நிர்வாகி ஸ்ரீகுமார் என்பவர் எ.ம.சா.1** ஆக விசாரணை செய்யப்பட்டு எ.ம.சா.ஆ.1 சான்றாவணமும், மேலும் எதிரி தரப்பில் **எதிரி தேன்மொழி என்பவர் எ.ம.சா.2** ஆக விசாரணை செய்யப்பட்டு அத்துடன் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**7. எதிரி தரப்பின் எதிர்வாதம்**

எதிரி தரப்பில் எதிரி குற்றத்தை செய்யவில்லை எனவும் பொய்யான வழக்கு எதிரியின் மீது புனையப்பட்டுள்ளது என்றும் வாதிடப்பட்டது, இருந்தபோதிலும் எதிரி தரப்பில் சாட்சியங்களோ சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**8. இந்த வழக்கில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகள் :-**

**1. எதிரிக்கு எதிரான மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?** என்பதேயாகும்.

**9) தீர்வு, தீர்வுக்கான காரணங்கள் மற்றும் விளக்கங்கள் :-**

**(i) பு.சா.1ன் சாட்சிய சுருக்கம்,**

புகார்தாரர் தனது புகாரில் சொல்லியுள்ள சங்கதிளையே தனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளார். மேலும் தனது தரப்பில், எதிரி 31.12.2013 ம் தேதியிட்டு புகார்தாரருக்கு கொடுத்த பொள்ளாச்சி கிளை, ஐ.டி.பி.ஐ. வங்கிக் காசோலை (காசோலை எண் 017754) அசல் **பு.சா.ஆ.1** ஆகவும், 31.12.2013 ம் தேதி வாதி வங்கியில் வசூலுக்கு சமர்ப்பித்த செல்லான் **பு.சா.ஆ.2** ஆகவும், 02.01.2014 ம் தேதியிட்ட வங்கி ரிட்டன் மெமோ **பு.சா.ஆ.3** ஆகவும், 20.01.2014 ம் தேதியிட்டு புகார்தாரர், எதிரிக்கு தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு வழங்கிய சட்ட அறிவிப்பு நகல் **பு.சா.ஆ.4** ஆகவும், 20.01.2014 ம் தேதி பதிவு தபால் அனுப்பிய அத்தாட்சி **பு.சா.ஆ.5** ஆகவும், 29.01.2014 ம் தேதியிட்ட ஒப்புகை அட்டை **பு.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

புகார்தாரர் தனது புகாரில் எதிரி எனக்கு நன்கு பழக்கம் என்றும், தான் பணம் கொடுக்கும்போதும், எதிரி பணத்தைப் பெற்றுக் கொண்டு காசோலை கொடுக்கும்போதும் மன்மதராஜ் என்பவர் உடனிருந்தார் என்று கூறியுள்ளார்.

புகார்தாரர் தனது குறுக்குவிசாரணையில் உங்களிடம் 2012 ம் ஆண்டு கொடுத்த காசோலையை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வீட்டில் வைத்திருந்த பணத்தைக் கொடுத்தேன். சாட்சியிடம் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலையைக் காட்டி கேட்டபோது காசோலையில் உள்ள விபரங்களை எதிரி பூர்த்தி செய்து கொண்டு வந்ததாக கூறினார். வழக்குக் காசோலை திரும்பி வந்த பிறகு எதிரியிடம் சென்று 4 முறை கேட்டேன். நான் நேரடியாக அவர்கள் வீட்டில் சென்று கேட்டேன். இந்த வழக்கு தேதிக்கு முன்னர் எதிரிக்கு சின்ன அமொண்ட் பணம் கொடுத்து இருக்கிறேன். அவர் வாங்கிக் கொண்டு திருப்பிச் செலுத்துவிடுவார். அவருக்கு பணத்தை காசோலை மூலமாக கொடுக்கவில்லை. 10,000/- ஒருமுறை 40,000/- ஒருமுறை கொடுத்து இருக்கிறேன்.

எதிரிக்கு பணம் 6, 7 மாதத்திற்கு முன்பு கொடுத்து இருக்கிறேன். முன்பு தொகை கொடுத்தபோது எந்த ஆவணமும் காசோலையும் எதிரியிடம் வாங்கவில்லை. பணம் கொடுத்து பிறகு 15 நாட்கள், 20 நாட்களில் எதிரி திருப்பிச் செலுத்திவிட்டார். ஜனவரி 2 ம் தேதி வழக்குக் காசோலையின் பணம் இல்லை என்று திரும்பி வந்துவிட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் மன்மதராஜ் என்பவர் பு.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணையில், 23.12.2013 ம் தேதியன்று மாலையில் நான் வீட்டில் இருந்தேன். அப்போது நான் மாலையில், 6.45 நான் மனுதாரரின் வீட்டிற்கு சென்றிருந்தேன். அப்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி துரைசாமி வீட்டுக்கு வந்திருந்தார். பணம் ரூ.1,00,000/- துரைசாமி என்பவரிடம் வாங்கிக் கொண்டு செக்கைக் கொடுத்தார். ஒரு வாரத்தில் திருப்பிக் கொடுப்பதாக சொல்லி கைமாத்தாக வாங்கிச் சென்றார். அதன்பின்பு ஒரு வாரம் கழித்து பணம் வரவில்லை என துரைசாமி சொன்னார் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தினை எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

இவ்வழக்கில் கடந்த 21.03.2019 ம் தேதி எதிரி தரப்பில் வங்கி மேலாளர் எ.ம.சா. 1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அதன்பின்னிட்டு எதிரி, தவறுதலாக எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார், எனவே மேற்படி எதிரியின் சாட்சியம் எ.ம.சா.2 ஆக இந்நீதிமன்றத்தில் கருத்தில் கொள்ளப்படுகிறது.

எதிரி தரப்பில் ஐடிபிஐ வங்கி மேலாளர் ஸ்ரீகுமார் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணையில், காசோலைப் புத்தகத்தில் உள்ள காசோலை எண் 017754 எந்த எந்த தேதியில் வசூலுக்காக வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் எங்களது வங்கி ஆவணங்களின் படி காசோலை எண் 017754 அவரால் உபயோகிக்கப்படவில்லை என தெரிய வருகிறது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அவர் தனது குறுக்குவிசாரணையில் என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.1 காசோலையானது எங்களது வங்கியில் இருந்து வழங்கப்பட்டது தான் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.3 வங்கி ரிட்டன் மெமோவானது பெரல் வங்கியில் இருந்து காசோலை எங்களது வங்கிக்கு அனுப்பப்பட்டு மேற்படி குறிப்பிட்ட வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல என்று சாட்சியம்அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியத்தினை ஆராய்ந்து பார்க்கும்போது பு.சா.ஆ.1 ஆவணம், பு.சா.ஆ.3 ஆவணத்திற்கு முற்றிலும் முரண்பட்டு எ.ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார், எனவே மேற்படி எ.ம.சா.1ன் சாட்சியத்தினை எதிரிக்கு ஆதரவாக ஏற்றுக் கொள்ள இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

எதிரி தரப்பில் எதிரி தன்னை எ.ம.சா.2 ஆக முன்னிலைப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில், காசோலையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். ஆனால் காசோலையில் மேலே எழுதியுள்ள வாசங்கள் நான் எழுதவில்லை. புகார்தாரரிடம் இருந்து வழக்கறிஞர் அறிவிப்பு வந்தது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சாட்சியத்தினை ஆராய்ந்து பார்க்கும்போது புகார்தாரருக்கு, எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் உள்ளது என்பதும் எதிரி புகார்தாரரிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு தான் காசோலை கொடுத்துள்ளார் என்பதும் தெளிவாக தெரிகிறது. மேலும் புகார்தாரர் தரப்பு சாட்சியங்களை பொய் என்றும் நிரூபணம் செய்யும் வகையில் எதிரி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் அவருக்கு ஆதரவாக இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் காசோலை கொடுக்கவில்லை என்றோ, காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றோ குறிப்பிட்டு சாட்சிகளையோ சான்றாவணங்களையோ எதிரி தரப்பில் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை, எனவே புகார்தாரர், எதிரிக்கு எதிரான இவ்வழக்கினை ஐயம் திரிபுற நிரூபணம் செய்துள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>10) முடிவாக,</u>**

(i) எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு, எதிரிக்கு 6 மாத காலம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும்,

(ii) எதிரி, புகார்தாரருக்கு காசோலை தொகையான ரூ.1,00,000/- ஐ ஒரு மாத காலத்திற்குள் திருப்பி கொடுக்கவும்,

(iii) மேலும் எதிரி புகார்தாரருக்கு இழப்பீடாக கு.வி.மு.ச. பிரிவு 357(3) ன் கீழ் ரூ.50,000/- ஐ செலுத்தவேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் எதிரிக்கு 6 மாத கால மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் கு.வி.மு.ச. பிரிவு 255(2) ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**11. புகார்தாரர் தரப்பு சாட்சிகள்**

**பு.சா.1** – துரைசாமி (புகார்தாரர்)

**பு.சா.2** - மன்மதராஜ்

**12. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| **பு.சா.ஆ.1** | எதிரி 31.12.2013 ம் தேதியிட்டு புகார்தாரருக்கு கொடுத்த பொள்ளாச்சி கிளை, ஐ.டி.பி.ஐ. வங்கிக் காசோலை (காசோலை எண் 017754) அசல் | அசல் |
| **பு.சா.ஆ.2** | 31.12.2013 ம் தேதி வாதி வங்கியில் வசூலுக்கு சமர்ப்பித்த செல்லான் | அசல் |
| **பு.சா.ஆ.3** | 02.01.2014 ம் தேதியிட்ட வங்கி ரிட்டன் மெமோ | அசல் |
| **பு.சா.ஆ.4** | 20.01.2014 ம் தேதியிட்டு புகார்தாரர், எதிரிக்கு தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு வழங்கிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |
| **பு.சா.ஆ.5** | 20.01.2014 ம் தேதி பதிவு தபால் அனுப்பிய அத்தாட்சி | அசல் |
| **பு.சா.ஆ.6** | 29.01.2014 ம் தேதியிட்ட ஒப்புகை அட்டை | அசல் |

**13. புகார்தாரர் தரப்பு சான்றுபொருள்**: இல்லை

**14. எதிரி தரப்பு சாட்சி,**

**எ.ம.சா.1** – ஸ்ரீகுமார் ( வாடிக்கையாளர் சேவை நிர்வாகி, ஐ.டி.பி.ஐ வங்கி, பொள்ளாச்சி கிளை)

**எ.ம.சா.2** - தேன்மொழி

**15. எதிரி தரப்பு சான்றாணவங்கள்**

| | |
|---|---|
| **எ.ம.சா.ஆ.1** | தேன்மொழி என்பவருக்கான வங்கி கணக்கிற்குரிய கணக்கு அறிக்கை 31.03.2011 முதல் 31.03.2014 வரை |

**16. எதிரி தரப்பு சான்றுபொருள்-** இல்லை

**17. குறிப்பு:**

1) எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

**ஒ/ம். E. பிரகாசம் B.A., B.L.,**
**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**

**//உண்மை நகல்//**

**நீதித்துறை நடுவர் எண்-2,**
**பொள்ளாச்சி.**